பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 சித்திரை 16 செவ்வாய்க்கிழமை (29-04-1997) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 152

## வெறிச்சோடிய நிலையில் மாங்குளம், ஓமந்தைப் பகுதிகள்

கொழும்பு, ஏப். 29

இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வெளியேறியதை அடுத்து ஓமந்தை, கனகராயன்குளம், புளியங்குளம், மாங்குளம் ஆகிய பகுதிகள் வெறிச்சோடிக் இடப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா — கிளிநொச்சி நெடுஞ்சாலையைக் கைப்பற்றுவதற்கான பெரும் படை நடவடிக்கை எந் நேரமும் ஆரம்பிக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியதை அடுத்து பிரதான வீதியில் இரு புறங்களிலும் இருந்து மக்கள் பெரும் எண்ணிக்கையில் வெளியேறி வவுனியா நகரப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இதேவேளை —

இராணுவ நடவடிக்கையை எதிர்பார்த்து மன்னார் மாவட்டத்திலும் பல இடங்களில் இருந்து மக்கள் வெளியேறி மன்னார்த் தீவுக்குச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலுப்பைக் கடவை, கள்ளியடி, வெள்ளாங்குளம், முழங்காவில், நாச்சிக்குடா ஆகிய பகுதிகளில் இருந்தே மக்கள் வெளியேறியுள்ளனர். (ஐ-3-150)

### ஆயுதங்களை எடுத்து வரும்

## கடல் வழிப் பாதையைத் தடுத்தால் புலிகள் சரணடையும்வழிக்குவருவர்

### கடற்படைத் தளபதி நம்பிக்கை

கொழும்பு, ஏப். 29

''விடுதலைப் புலிகளுக்கு கடல் வழியாகவே ஆயுதங்கள் வருகின்றன. யுத்தத்தின் வெற்றி கடற்படைப் பலத்தில்தான் தங்கியுள்ளது. கடற் கண்காணிப்பு நூறு வீதம் வெற்றிகரமாக நடத்தப்பட்டால் புலிகள் கைகளை உயர்த்தியபடி, வெள்ளைக் கொடிகளுடன் வருவார்கள்.''

—கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிசில் திசேரா மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இப்படித் தெரிவித்தார்.

அந்தப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடற்படையின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள அரசு, கடற்படைக்கு உரிய இடத்தை அளிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

கடற்படையின் தற்போதைய பலத்தை மூன்று மடங்காக அதிகரிக்க வேண்டும்.

கடற்படைக்கு 110 கலங்கள் தேவை. கடலில் தங்குதடையின்றி கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள வசதியாக நூறு வோட்ட ஜெட்

(8ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண அரசின் மீது அழுத்தம் கொடுங்கள்!

## சர்வதேச பிரதிநிதிகளிடம் யாழ். ஆயர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

“அரசாங்கம் தனது இராணுவப் போக்கைக் கைவிட்டு இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண முன்வரவேண்டும். இந்தப் பேச்சுவார்த்தையில் குறிப்பாக விடுதலைப் புலிகள் பங்கேற்க வேண்டும். பேச்சு மூலம் தீர்வு காண முன்வருமாறு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்''

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார் யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் அவர்கள்.

கடந்த வாரம் ஆயர் இல்லத்துக்கு விஜயம் செய்து தம்மைச் சந்தித்த கொழும்புக்கான நெதர்லாந்துத் தூதுரகப் பொறுப்பாளர் மற்றும் தூதரகப் பிரதிநிதிகள் குழுவினர் ஆகியோரிடமே இந்த வேண்டுகோளை யாழ். ஆயர் வெளிபிட்டார்.

கடந்த வார இறுதியில் யாழ். அரச அதிபர்

(8 ஆம் பக்க பார்க்க)

## ஒரு வார காலத்தில் 48 படையினர் புலிகளின் தாக்குதல்களில் பலி!

மணிலா, ஏப். 29

கடந்த வாரத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் படையினர் தரப்பில் குறைந்தது 48 பேர் பலியாகியுள்ளனர்.

'புலிகளின் குரல்' வானொலிச் செய்திகளின்படி இந்தத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் மூவர் மாத்திரமே உயிரிழந்திருக்கின்றார்கள்.

செய்தி ஏஜென்ஸி ஒன்று இவ்வாறு நேற்றிரவு தகவல் வெளியிட்டது.

கிழக்கில் கடந்த ஞாயிறன்று புலிகள்மேற்கொண்ட தாக்குதலில் படையினர் மற்றும் பொலீஸார் 29 பேர் உயிரிழந்துள்ளனர்; பொலீஸ் காவல் நிலையம் ஒன்றிலிருந்து ஆயுதங்களும் அபகரிக்கப்பட்டுள்ளன.

வடக்கில் அல்லது கிழக்கில் படையினர் குவிக்கப்படும் போது புதிய நடவடிக்கை ஒன்றுக்காகவே இவ்வாறு குவிக்கப்படுகின்றனர் எனச் சந்தேகித்து புலிகள் தமது கொள்ளாத் தாக்குதல்களை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் மேதினக் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. மட்டுமே பங்குபற்றும்

கொழும்பு, ஏப். 29

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டத்தில் தமிழ்க் கட்சிகளில் ஈ.பி.டி.பீ. மட்டுமே கலந்து கொள்ளும் எனத் தெரியவருகிறது.

மேதினக் கூட்டத்தில் அரசுடன் சேர்ந்து பங்குபற்றுமாறு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி விடுத்த அழைப்பை ஈ.பி.டி.பி. தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் நிராகரித்துவிட்டன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மேதின ஏற்பாட்டுக் குழுவின் தலைவரும் பிரதி அமைச்சருமான அலவி மௌலானா கடந்த வெள்ளியன்று இந்த அழைப்பை விடுத்திருந்தார்.

அரசின் மேதினக் கூட்டத்

(8ஆம் பக்கம் பார்க்க)

### திருமலைத் தாக்குதல்களில்

## பலியான படையினரின் எண்ணிக்கை உயர்வு!

கொழும்பு, ஏப். 29

திருகோணமலை மாவட்டம் புல்மோட்டை மற்றும் பள்ளிக் குடியிருப்புப் பகுதிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகலிலும் பிற்பகலிலும் விடுதலைப் புலிகள் நடத்திய இரண்டு அதிரடித் தாக்குதல்களிலும் உயிரிழந்த படையினர் மற்றும் பொலீஸாரின் எண்ணிக்கை 32 ஆக உயர்ந்துள்ளது.

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டதாக செய்தி ஏஜென்சியின் தெரிவித்தன.

இத் தாக்குதல்களில் அரசுத் தரப்பில் மொத்தம் 29 பேர் பலியானதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (உ)

## புலிகள் தரப்பில் மூவர் உயிரிழப்பு

புல்மோட்டை மற்றும் மூதூர் பள்ளிக்குடியிருப்புப் பகுதிகளில் கடந்த ஞாயிறு அன்று படையினர் மற்றும் பொலீஸார் மீது தாங்கள் நடத்திய இரு வெவ்வேறு அதிரடித் தாக்குதல்களின் போது தங்கள் தரப்பில் மூவர் உயிரிழந்ததாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

புல்மோட்டைத் தாக்குதலில் லெப்டினன்ட் குயில் வேந்தன், லெப்டினன்ட் இராகுலன் ஆகியோரும் —

பள்ளிக்குடியிருப்பில் லெப்டினன்ட் செந்தில்குமாரும் —

களப்பலியானதாக 'புலிகளின் குரல்' அறிவித்தது.

கடந்த ஆண்டு ஏப்ரல் 8 ஆம் திகதி திருகோணமலையில் கொல்லப்பட்ட தங்களது போராளி மேஜர் கருணா நினைவாக இந்த இரு தாக்குதல்களும் நடத்தப்பட்டதாகவும் —

புல்மோட்டைத் தாக்குதலில் ரி-56 ரகத் துப்பாக்கிகள் — 17, கிரனேற்றுக்கள் — 16, தொலைத் தொடர்புக் கருவி 1 ஆகியன உட்பட பெருமளவு ஆயுததளபாடங்கள் கைப்பற்றப் பட்டதாகவும் —

'புலிகளின் குரல்' மேலும் தெரிவித்தது. (உ)

## கற்பிட்டியில் பதற்றம் தணிவு

கற்பிட்டியில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற அசம்பாவித சம்பவத்தின் பின்னர் அங்கு நீடித்த பதற்ற நிலை தற்போது தணிந்துள்ளது.

அங்கு நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளதாகபொலீஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டியில் அனல் மின் நிலையம் ஒன்றை அமைக்க அரசு எடுத்த நடவடிக்கையை ஆட்சேபித்து அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் செய்த போது பொலீஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டினால் ஒருவர் மரணமானதும் பலர் காயமடைந்ததும் தெரிந்ததே. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தி வரவேற்கின்றோம் !!

கல்வி உலகில்
நல்லாசிரியனாய், திறமைசால் அதிபராய், கோட்டப் பணிப்பாளராய் உயர்ந்து நிற்கும்

**உயர் திரு. ஆ. கமலநாதன் அவர்களை**

வருக வருக என வாழ்த்தி வரவேற்பதுடன்

தங்கள் தன்னலங்கருதாச் சேவையில் தெல்லிப் பழைக் கல்விக் கோட்டம் கல்வியில் சிறப்புப் பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

- அதிபர் சங்கம்

**தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்**

(சி/635)

# அரசாங்க அறிவித்தல்

## வெற்றிடங்கள் நிரப்புதல்

**சுகாதார சேவைகள் பிரிவு, யாழ்ப்பாணம்.**

எமது பிராந்தியத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன

1. வைத்தியர்கள்
2. பதிவுபெற்ற மருந்துவர் / உதவி மருத்துவ உத்தியோகத்தர்கள்.
3. குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்
4. பொது சுகாதார சேவை உத்தியோகத்தர்
5. வைத்திய இரசாயன தொழில் நுட்பவியலாளர்
6. 'எக்ஸ்' கதிர் இயக்கவியலாளர்.

இப்பதவிகளுக்கு மீள் நியமனம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு பதவிக்கும் நியமனம் பெற விரும்புபவர்கள் சான்றிதழ்கள் / ஆவணங்கள் ஆகியவற்றுடன் **15-05-97** ஆந் திகதி எனது பணிமனையில், நிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

**வைத்திய கலாநிதி. க. தா. சிவபாதம்,**
பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

(சி/634)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் கதிரவேலு நடராசா

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் பத்தர்கேணியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் ஊர்காவற்றுறை சக்தி ஸ்ரோர்ஸ் உரிமையாளரின் தந்தையும் ஆன கதிரவேலு நடராசா 24 - 04 - 1997 அன்று அகால மரணமடைந்ததையிட்டு, அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வர்த்தகர் சங்கம்,**
**ஊர்காவற்றுறை.**

(46551)

# நன்றி நவிலல்

## அமரர் கமலாவதி

எமது இல்லத்தரசி அமரர் கமலாவதி அவர்கள் நோய்வாய்ப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த காலத்தில் மிகுந்த சிரத்தையுடனும், கவனமாகவும் வைத்திய சிகிச்சையளித்த வைத்திய நிபுணர் திருமதி நாகேந்திரா அவர்களுக்கும், அமரரவர்களுக்கு நோய் ஆரம்பித்த வேளை தொட்டு இறுதிவரை எமது குடும்பத்திற் கொண்ட பேரபிமானம் காரணமாக உளப்பூர்வமான பேருதவிகள் புரிந்த வைத்திய கலாநிதி காந்தநேசன் அவர்களுக்கும், ஏனைய வைத்தியப்பெருந்தகைகளுக்கும், வைத்திய தாதிமார், பணியாளர் ஆகியோருக்கும், அவரது மறைவுச் செய்திகேட்டு நேரிற் சமுகமளித்தும், தந்தி, கடிதங்கள் மூலம் தமது அனுதாபங்களைத் தெரிவித்தும், மலர்கள் சாத்தியும், மலர் மாலைகள் அணிவித்தும் கண்ணீர் அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், அன்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்ட மூளாய் கிழக்கு ஐக்கிய நாணய சங்கத்திற்கும் எமது உளங்கனிந்த நன்றி உரியதாகுக.

எங்களது தெய்வமனைய அம்மா கமலாவதி அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த காலத்தில் இரவு பகலாக, கண் துஞ்சாது, மெய்வருத்தம் பாராது அருகிருந்து கவனித்த உறவினர், நண்பர்களுக்கும், அவரது மரணச்சடங்கு, அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம் ஆகியவற்றில் தங்கருமம், எங்கருமம் எனப்பாராது விசுவாசமாக உதவிகள் புரிந்த எமது அன்பிற்கினியவர்களுக்கும், எமது அழைப்பை ஏற்று இவ்வைபவங்களிற் பங்குபற்றிய பெரியோர், பெண்மணிகள், குழந்தைகள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நா. வேலுப்பிள்ளை,**
**இராஜ்குமார் குடும்பத்தினர்,**
**சூரியகுமார்.**

மூளாய், சுளிபுரம். (46556)

## வெள்ளிதோறும் பூசை

யாழ்ப்பாணம், ஏப். 29

கொல்லங்கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் பிரதி வெள்ளிக் கிழமைகளில் பூசை நடைபெற்று வருவதாக தேவஸ்தான பிரதம குருவான ஸ்ரீலஸ்ரீ. எஸ். சிவசண்முகானந்தா குருக்கள் தெரிவித்தார்.

இதற்கு காங்கேசன்துறை பிரிகேடியர் அனுமதி அளித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## விசேட அ. அட்டை

செம்பியன்பற்று, ஏப். 29

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்டோருக்கான விசேட அடையாள அட்டைகள் வல்லிபுரக்கோயில் சிவில்நிர்வாக அலுவலகத்தில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த 28ஆம் திகதியில் இருந்து மே மாதம் 2 ஆம் திகதி வரை இதனை வழங்க ஏற்பாடாகி உள்ளது.

எனவே அந்தந்தக் கிராம சேவையாளருடன் தொடர்பு கொண்டு விசேட அடையாள அட்டையைப் பெறுமாறு மருதங்கேணி பிரதேச செயலகம் கேட்டுள்ளது. (இ-36)

## யாழ். பல்கலை ஊழியர் இன்று வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப். 29

அனைத்துப் பல்கலைக் கழகங்களின் ஊழியர்கள் தொழிற்சங்க சம்மேளனம் நடத்தி வரும் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இன்று செவ்வாய்க் கிழமையும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளவுள்ளது.

பாதுகாப்பு சேவையினரும் நீர், மின் விநியோக பணியாளர்களும் தவிர்ந்த ஏனைய ஊழியர்கள் இன்று கடமைக்குச் சமுகமளிக்க மாட்டார்கள் என்றும்—

சகல ஊழியர்களையும் காலை 9 மணிக்கு இராமநாதன் மண்டப முன்றலில் கூடுமாறும் யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கம் விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மேதின விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 29

மேதினத்தை ஒட்டி ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி முன்றலில் இன்று செவ்வாய்க் கிழமை முதல் மூன்று நாள்களுக்கு விளையாட்டு விழாவும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

ஈ. பி. டி. பி அமைப்பினர், ஊர்காவற்றுறை பிரசைகள் குழு மற்றும் சங்கங்களின் ஆதரவுடன் சனசமூக நிலையங்களின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

ஊர்காவற்றுறை பிரசைகள் குழுத் தலைவர் திரு. கி. லீனஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரச அதிகாரிகளும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ஐ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ். பல்கலைக் கழக கலைப்பீட 4 ஆம் வருட மாணவர்களது கல்விச் சுற்றுலா தொடர்பான கலந்துரையாடல் நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. சகல மாணவர்களையும் அங்கு சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா தங்கம்மா

திருமதி கந்தையா தங்கம்மா அவர்கள் 28-04-97 (நேற்று) பிற்பகல் 4-00 மணிக்கு சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் திருமதி கமலாவதி, காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் சுந்தரலிங்கம் (ஓவியர்), திருமதி இரத்தினாம்பாள், குமாரதாஸ் (ஸ்கை வீடியோ மூவிஸ், ஆனைக்கோட்டை) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்லையா, சரஸ்வதி, விஜயராணி, ஜெயராசா, கிருஷ்ணபவானி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான செல்லாச்சி, கந்தையா, வைத்திலிங்கம், வேலுப்பிள்ளை ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் (29-4-97)இன்று செவ்வாய் நண்பகல் 12மணிக்கு நடைபெற்று பூதவுடல் கல்லுண்டாய் மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
பிள்ளைகள்

ஆனைக்கோட்டை மூத்தநார் கோயிலடி,
சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை. (சி/637)

## முருகேசு செல்வம் (செல்லர்)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் நாயன் மார்கட்டு ஆஸ்பத்திரி முன் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்வம் (செல்லர்) 27-04-97 அன்று காலமாகிவிட்டார்.

இவர் பார்வதியின் அன்புக் கணவரும், நவநீதம், அருணோதயம், சிங்காசனம், இராஜபூபதி (தாதி, யாழ். போதனா வைத்தியசாலை), சறோஜினி, இராசமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. சதானந்தன் (பவா)

ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை,
நாயன்மார்கட்டு,
நல்லூர். (46563)

## அலோஷியஸ் அன்ரன் தேவதாஸ் (றாஜன்)

சில்லாலை
(நில அளவைத் திணைக்களம், புத்தளம்)

சில்லாலையைச் சேர்ந்த அன்ரன் தேவதாஸ் (றாஜன்) 25- 04- 97இல் புத்தளத்தில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான அலோஷியஸ் (இளைப்பாறிய ஆசிரியர்) திருமதி ஆன்கிறேஸ் அலோஷியஸ் அவர்களின் அன்பு மகனும், யசிந்தா யோகறாணியின் அன்புக் கணவரும், அஜந்தா, வினோத், அஞ்சனா, கோபிநாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பற்றிமா ராணி (நியூசிலாந்து) ஜெனிற்றா (M. P. C. S. பண்டத்தரிப்பு), வனிதா, யஸ்ரின் (வேந்தன்) (C. T. B. கோண்டாவில்), பற்றி (நியூசிலாந்து), சந்திரன் ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 27- 04- 97இல் புத்தளத்தில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களி அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 30- 04- 97 புதன்கிழமை காலை 6 மணிக்கு அருள் ஆச்சிரமத்திலும், அடைக்கல அன்னை ஆலயத்திலும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் படும்.

தகவல்:
ராணி யோசவ்

387, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (46558)

## பூராணஆனந்தம் இராஜேஸ்வரி

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் தச்சன்தோப்பை வதிவிடமாகவும் கொண்ட பூராணஆனந்தம் இராஜேஸ்வரி 28 - 04 - 97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூராணஆனந்தத்தின் அன்பு மனைவியும், ஆனந்தகுமார் (ஜேர்மனி), சத்தியநாதன் (பிரான்ஸ்), செல்வகுமார், திலீப்குமார், டனிஸ்ஷா, அசோக்குமார், தவநிதி, சாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேந்திரனின் மாமியாரும், சன்சகாந்தன், அயந்தன், கோபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (29 - 04 - 97) காலை 10 மணிக்கு பூதவுடல் தச்சன்தோப்பு வேலம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திலீப்குமார் (மகன்)

அம்மன் கோயில் றோட்,
தச்சன்தோப்பு. (46561)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

# காஷ்மீர் பிரச்சினை குறித்து பேச்சுக்கே இடம் இல்லை

## குஜ்ரால் அறிவிப்பு

ஸ்ரீநகர், ஏப். 29

காஷ்மீர் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லை

இப்படி இந்தியப் பிரதமர் ஐ. கே. குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு மாநிலத்தை ஆண்டு கொண்டிருக்கும் போது தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாரில்லை என அவர் தெரிவித்தார்.

காஷ்மீர் பிரச்சினையால் இடம் பெயர்ந்துவாழும் காஷ்மீர் மக்கள் மீண்டும் தமது இடங்களுக்குத் திரும்ப அரசு அனைத்து உதவிகளையும் வழங்கும். அவர்களுக்கு வேலை வாய்ப்புகளையும் அரசு வழங்கும். இதற்காக நாட்டின் ஒட்டுமொத்த நிதியைச் செலவிட வேண்டி வரினும் கவலையில்லை.

இப்படி குஜ்ரால் மேலும் தெரிவித்தார்.

காஷ்மீர் தொடர்பாக இந்தியாவும் பாகிஸ்தானும் இதுவரை இரு யுத்தங்களை நடத்தி உள்ளன.

1947 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் கீழ் மட்டத்தில் இருந்து வருவதற்கு காஷ்மீர் பிரச்சினையே முக்கிய காரணமாக இருந்து வருகிறது. (இ-10

## மாட்டுத்தீன் ஊழலில் 54 பேர்

புதுடில்லி, ஏப். 29

சுமார் 270 கோடி டொலர் மாட்டுத்தீன் ஊழல் வழக்கில் பிஹார் மாநில முதல்வர் லாலு பிரசாத் யாதவ் மற்றும் சில அமைச்சர்கள் உட்பட 54 அரச அதிகாரிகள் மீது குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட உள்ளன.

அவர்களை விசாரிக்க இந்திய மத்திய புலனாய்வுத் துறை நேற்று முன்தினம் முடிவு செய்துள்ளது. (இ-10)

## சர்வதேச இரசாயன ஆயுத தடை ஒப்பந்தத்தில் சீனா

பீஜிங், ஏப். 29

சர்வதேச இரசாயன ஆயுதங்கள் தடை ஒப்பந்தத்தில் சீனா கைச்சாத்திட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள 78 ஆவது நாடு சீனா ஆகும்.

இந்த உடன்படிக்கை 20 வருடகால விவாதத்தின் பின்னர் 1993 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டது.

இரசாயன ஆயுதங்களை அபிவிருத்தி செய்தல், உற்பத்தி செய்தல், களஞ்சியப் படுத்தி வைத்தல், பயன்படுத்தல் ஆகியவற்றைத் தடுக்கும் ஒப்பந்தம் இன்று முதல் அமுலுக்கு வருகிறது.

உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் மூலம் இரசாயன ஆயுதங்களை தடுக்கும் ஸ்தாபனத்தின் ஸ்தாபக உறுப்பினராகச் சீனா விளங்கும். (இ-3)

## துருக்கியில் தேசிய அரசு நிறுவ முன்னாள் பிரதமர் யோசனை

துருக்கி நாட்டில் இஸ்லாமியக் கட்சியின் ஆட்சி நடைபெற்று வருகின்றபோதிலும் அந்நாட்டு இராணுவம் மதசார்பற்ற — கருத்து உறுதி மிக்க தளபதிகளைக் கொண்டுள்ளது.

இதனால் அரசுக்கும் இராணுவத்துக்கும் இடையே முறுகல் நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய சூழ்நிலையில் தேசிய அரசு ஒன்றை அமைப்பதே நாட்டுக்கு நல்லது என துருக்கியின் முன்னாள் பிரதமர் வின்மாஸ் கருத்துத் தெரிவித்துள்ளார். (இ-10)

## இரசாயன ஆயுதத் தடை ஒப்பந்தம்: அமெரிக்க செனற்சபை அங்கீகாரம்

வாஷிங்டன், ஏப். 29

உலகெங்கும் இரசாயன ஆயுதங்களின் உற்பத்தி, சேர்த்து வைத்தல், இடம் மாற்றுதல், பிரயோகம் ஆகியவற்றைத் தடைசெய்வதற்கான உடன்படிக்கை அமெரிக்க செனற் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இரண்டு தசாப்த கால பேச்சுவார்த்தையின் பின்னர் 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உலக நாடுகள் கைச்சாத்திடுவதற்காக வெளியிடப்பட்ட இந்த உடன்படிக்கையில் இதுவரை 164 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன. 74 நாடுகள் இவ்வுடன்படிக்கைக்கு இறுதி அங்கீகாரம் வழங்கவுள்ளன.

ஜப்பான், இந்தியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் அங்கீகாரம் வழங்கிய நாடுகளில் சிலவாகும். சீனா, ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் கைச்சாத்திட்ட போதிலும் உடன்படிக்கைக்கு இன்னமும் இறுதி அங்கீகாரம் வழங்கவில்லை. ஈராக், லிபியா உட்பட இன்னும் சில நாடுகள் கைச்சாத்திடவில்லை.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமையிலிருந்து இந்த உடன்படிக்கை அமுல் செய்யப்படும். செவ்வாய்க்கிழமைக்கு முன் உடன்படிக்கைக்கு இறுதி அங்கீகாரம் வழங்காத நாடுகள் நிறைவேற்றுச் சபையில் அங்கத்துவம் பெறத் தகுதியற்றவையாகும். செயல் நிறைவேற்றத்துக்கான விதிகளை நிறைவேற்றுச் சபையே தயாரிக்கும்.

உடன்படிக்கையின் அங்கத்துவ நாடுகள் 2007 ஆம் ஆண்டளவில் அவற்றிடமுள்ள சகல இரசாயன ஆயுதங்களையும் அவற்றின் உற்பத்தி சாதனங்களையும் ஒழித்துவிட கடமைப்பட்டுள்ளன. உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட இரசாயனப் பொருள்களை தயாரிக்கும் கம்பனிகளை கண்டுபிடிப்பதற்கான சோதனைகளை செய்வதற்காக இரசாயன ஆயுதத்தடை நிறுவனம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஒரு அங்கத்துவ நாடு மற்றொரு அங்கத்துவ நாட்டில் இயங்கும் இரசாயன ஆயுத உற்பத்தி நிலையம் குறித்து சோதனை நடத்துமாறு சவால் விடுக்க முடியும். உடன்படிக்கையின் படி இரசாயன ஆயுதங்களின் அச்சுறுத்தலுக்கு உள்ளான எந்தவொரு அங்கத்துவ நாட்டுக்கும் பயிற்சியும் உபகரணங்களும் வழங்கப்பட வேண்டும். அத்துடன் அச்சுறுத்தலுக்கு உள்ளான நாட்டுக்கு உரிய தொழில்நுட்ப வசதிகளும் அளிக்கப்பட வேண்டும்.

கிருமிநாசனிகள் உட்பட ஆயுதங்களின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் நச்சுத் தன்மை வாய்ந்த இரசாயனப் பொருள்களின் உற்பத்தி கட்டுப்படுத்தப்படவில்லை ஆனால் இத்தகைய உற்பத்தி ஆலைகள் குறித்து அறிவிக்கப்பட வேண்டும் என்றும் அவை எந்நேரத்திலும் சோதனைகளுக்கு அனுமதிக்கப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### உலக அரங்கில்

## அமெரிக்காவில் 10 வயதுக்கு முன் பருவமடையும் சிறுமிகள்!

வாஷிங்டன், ஏப். 29

அமெரிக்கச் சிறுமிகள் பத்துவயதுக்கு முன்பே பருவமடைந்து விடுகிறார்கள்.

இதற்கான காரணத்தை அறிய அமெரிக்க விஞ்ஞானிகள் பல்வேறு ஆய்வுகளை மேற் கொண்டனர்.

நவீன தலைமுடித் தைலங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் ஆகியனவற்றின் எதிர் விளைவுகள் சுற்றுப்புறச் சூழலில் கலந்துவிட்டதே இதற்கு காரணமாக இருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

## அரசில் மூப்பனாரின் காங்கிரஸ் சேர மூத்த தலைவர்கள் பலர் ஆதரவு

சென்னை, ஏப். 29

ஐக்கிய முன்னணி அரசில் தமிழ் மாநில காங்கிரஸ் சேருவதற்கு தமிழ் மாநில காங்கிரஸின் மூத்த தலைவர்கள் பலர் ஆதரவு வழங்கி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செயற்குழுக் கூட்ட விவாதத்தில் கலந்த கொண்ட இளம் உறுப்பினர்கள் பலர் ஐக்கிய முன்னணி அரசில் மீண்டும் இணைய வேண்டாம் என வாதிட்டதாகவும்—ஆனால் அரசில் இணையாமல் தனித்து நிற்பது நீண்டகால அளவில் கட்சிக்கு நட்டத்தை விளைவிக்கும் என மூத்த தலைவர்கள் அறிவுறுத்தியதாகவும் தெரியவருகிறது.

எது எப்படியாயினும் தமிழ் மாநிலக் காங்கிரஸ் மீண்டும் ஐக்கிய முன்னணி அரசில் சேரும் என தமிழக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் அரசில் சேருவதா அல்லது இல்லையா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் அதன் தலைவர் மூப்பனாரிடம் விடப்பட்டது தெரிந்ததே. (இ-10)

### ஸயரில் காணாமற்போன

## ஹூட்டு அகதிகளை மீள குடியமர்த்த அனுமதி

கின்ஸாசா, ஏப். 29

கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கிழக்கு ஸயர் பகுதியில் முகாம்களில் இருந்து காணாமற் போய்விட்ட சுமார் 50 ஆயிரம் ஹூட்டு இன அகதிகளைக் கண்டு பிடித்து மீளக்குடியமர்த்த அகதிகளுக்கான ஐ. நா. பிரதிநிதிகளுக்கு 6 மாதகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

கிளர்ச்சியாளர் குழுவின் தலைவர் லோறன் கபீலா இந்த அவகாசத்தை அளித்துள்ளார்.

இதற்கிடையில் ஸயர் நாட்டில் உள்நாட்டுப் போரில் நேரடியாகவும் தீவிரமாகவும் ஈடுபட அமெரிக்கா முடிவு செய்துள்ளதாக வாஷிங்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

## ஐக்கிய முன்னணி அரசில் சேர காங்கிரஸ் கட்சிக்குள் எதிர்ப்பு

### சரத்பவார் கூறுகிறார்

மத்தியில் உள்ள ஐக்கிய முன்னணி அரசில் காங்கிரஸ் கட்சி சேர்வது பற்றிய பிரச்சினைக்கு இன்னும் ஓரிரு மாதங்களில் முடிவு எடுக்கப்படும் என்று மக்களவையில் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.

புனாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் ஐக்கிய முன்னணி அரசில் சேர்வதற்கு தற்போது கட்சியில் ஆதரவு இல்லை என்றும் குறிப்பிட்டார்.

எனினும் நாட்டின் நலனைக்கருதி தமிழ் மாநிலக் காங்கிரஸ் ஐக்கிய முன்னணி அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு கொடுப்பதைவிட அரசில் சேர்வதே நல்லது எனத் தாம் கருதுவதாகவும் அவர் கூறினார், (இ-3)

## யேமன் பொதுத் தேர்தலில் பெருமளவில் வன்முறைகள்

### இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு 8 பேர் பலி

1994 ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தத்துக்குப் பின் யேமன் நாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

ஹத்தியார் மாகாணத்தில் ஒரு வாக்களிப்பு நிலலயத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 8 பேர் கொல்லப்பட்டனர். தம்மார் மாகாணத்தில் இடம்பெற்ற வன்முறையில் இருவர் கொல்லப்பட்டனர். ஐவர் காயமடைந்தனர்.

எனினும் 80 சதவீத வாக்குகள் பதிவாகின எனத் தெரிவிக்கப்படுகிறது.

1990 ஆம் ஆண்டுவரை தெற்கு யேமன் வடக்கு யேமன் என இரண்டு இறைமையுள்ள நாடுகளாக யேமன் இருந்தது.

1990 இல் தான் இந்த இரண்டு நாடுகளும் இணைந்து ஒன்றுபட்ட யேமன் நாடு உருவானது.

ஆனால் 1994 ஆம் ஆண்டு தெற்கு யேமன் தனியாகப் பிரிய வேண்டும் என யேமன் குடியரசுக் கட்சி இயக்கமொன்றை ஆரம்பித்தது. இந்த இயக்கம் இராணுவத்தால் பலாத்காரமாக அடக்கப்பட்டது. (இ-10)

## இஸ்லாமிய தீவிரவாதக்குழு தாக்கும்

கிழக்கு ஜெரூஸலம் பகுதியில் இஸ்ரேல் அமைத்து வரும் யூதக் குடியிருப்புத் திட்டத்தினை முறியடிக்கும் விதத்தில் ''இஸ்லாமிய ஜிஹாத்'' என்ற பலஸ்தீன தீவிரவாத வன்முறைக் குழு தாக்குதல்களைத் தீவிரப் படுத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தில் காணாமற்போனோரில் 85 வீதமானோர் இராணுவத்தினர்!

## கொழும்பில் நடந்த கூட்டத்தில் தகவல்

கொழும்பு, ஏப். 29
''போர் முனையில் காணாமற்போன படையினரில் 85 சதவீதமானவர்கள் இராணுவப் பிரிவைச் சேர்ந்தவர்'' இப்படி காணாமற்போன படையினரின் நலன்களைக் கவனிக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை கொழும்பில் நடந்த இந்த அமைப்பின் கூட்டத்தில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

காணாமற்போன படையினரில் 12 சதவீதமானவர்கள் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

காணாமற்போன படையினரின் குடும்பங்களின் எதிர்காலம், அவர்களின் நலன்கள் ஆகியன குறித்தும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரிகளும் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

(இ-3-150)

## மதுவரிப் பரிசோதகர்களுக்கு குடாநாட்டில் பற்றாக்குறை

யாழ். மாவட்டத்தில் மதுவரிப் பரிசோதகர்கள், மதுவரி காவலர்கள் ஆகியோருக்கு கடும் பற்றாக்குறை நிலவிவருகின்றது.

இம் மாவட்டத்தில் சங்கானை, சாவகச்சேரி, மல்லாகம், பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து இடங்களில் மதுவரி நிலையங்கள் இருப்பதாகவும் —

இவற்றில் இரண்டு பரிசோதகர்களும், ஏழு காவலர்களும் மாத்திரமே கடமையாற்றி வருகின்றனர் என்றும் — யழ். மாவட்ட உதவி மதுவரி ஆணையாளர் வீரவாகு துரைராஜா தெரிவித்தார்.

13 பரிசோதகர்களுக்கும், 70 பாதுகாவலர்களுக்கும் வெற்றிடங்கள் இருப்பதாகவும் இவற்றை நிரப்புமாறு கொழும்பிலுள்ள மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்திடம் விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை இங்கு யாழ். மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு வாகனம் ஒன்றுஅவசியமாகத் தேவைப்படுகின்றது.

இதனை தந்து உதவுமாறு கேட்டிருந்தும் இதுவரை அது கைகூடவில்லை என்றும் உதவி மதுவரி ஆணையாளர் தெரிவித்தார்.

(இ-135)

## வன்னியிலிருந்து வரும் தீவக மக்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஏப். 29
வன்னிப் பகுதியில் இருந்து தீவகத்துக்கு கடல் மார்க்கமாக வந்து கொண்டிருக்கும் மக்களுக்கு உடனுக்குடன் உலர் உணவு வழங்கி சொந்த இடங்களில் அவர்களை மீளக் குடியமர்த்துவதற்கான விசேட ஏற்பாடுகள் தீவுப்பகுதி உதவி அரசாங்க அதிபர்களுடன் இணைந்து தம்மால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஈ.பி.டி.பி அமைப்பின் தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் மனோகரன் தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள நெருஞ்சி முனை, பருத்தியடைப்பு பகுதிகளை சேர்ந்தவர்களும் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பகுதிகளை சேர்ந்தவர்களும் வன்னியிலிருந்து வந்து கொண்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## சீரற்ற மின் விநியோகத்துக்கு கட்டணம் அறவிடுவதா?

### பாவனையாளர்கள் அதிருப்தி

பருத்தித்துறை, ஏப். 29
சீர் இல்லாத மின் விநியோகத்துக்கு கட்டணம் அறவிடப்படுவது குறித்து வடமராட்சிப் பகுதி மின் பாவனையாளர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை, புலோலி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதான வீதியின் இரு மருங்கிலும் உள்ள வீடுகளுக்கு இலங்கை மின்சார சபை மின் இணைப்பை வழங்கியிருந்தது.

இந்த மின் இணைப்பு கடந்த ஜனவரி மாதத்திலிருந்து வழங்கப்பட்டதாக்கருதி ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாதங்களுக்கும் மின்சாரக் கட்டணத்தை அறவீடு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த மின்சார இணைப்புக்கள் கடந்த காலங்களில் ஒழுங்காக வழங்கப்படவில்லை எனவும் அடிக்கடி விட்டுவிட்டு வலுக்குறைந்த மின்சாரமே கிடைத்ததெனவும் பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு மின் குமிழ்களுக்கு மேல் பாவிக்க வேண்டாம் என்பது உட்பட பல்வேறு நிபந்தனைகளை இலங்கை மின்சார சபை விதித்திருந்தது என்றும் —

இரவு 7.00 மணி முதல் அதிகாலை 5 00 மணி வரையே மின் விநியோகிக்கப்பட்டு வந்ததெனவும் — பொதுமக்கள் தெரிவித்தனர்.

ஒழுங்கான மின்சாரத்தை வழங்கிய பின்னரே கட்டணம் வசூலிப்பது பொருத்தமானதெனவும் பொதுமக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

(ஐ-118)

## அராலி மத்தியில் விரைவில் கால்நடை வைத்திய நிலையம்

அராலி, ஏப். 29
வட்டுக்கோட்டை கால்நடை அபிவிருத்தி சுகாதார திணைக்கள அலுவலகத்தின் கீழ் அராலி மத்தியில் கிராமிய கால்நடை வைத்திய நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது

இந் நிலையத்தில் கடமை புரிவதற்காக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் இரு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உத்தியோகத்தர்கள் வட்டுக்கோட்டை அலுவலகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் கிராமிய வைத்திய சாலையில் கடமை புரிவார்கள்.

இதனிடையே வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்பாளர் சங்கம் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தால் வழங்கப்பட்ட ஒரு நாள் கோழிக் குஞ்சுகளை வளர்த்து வருகின்றது.

இக் குஞ்சுகளை ஒருமாத காலத்தின் பின்னர் இப்பகுதி பண்ணையாளர்களுக்கு சகாய விலையில் விற்பனை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(இ-12)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப். 29
கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய இலட்சார்ச்சனை பூர்த்தி விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு 1008 சங்காபிசேகத்துடன் ஆரம்பாகும். இன்று பகல் மகேஸ்வர பூசையும் அதனைத் தொடந்து இலட்சார்ச்சனை பூர்த்தியும் விடே கணபதி ஹோமமும் நடைபெற்று பஞ்சமுக விநாயகர் சிங்க வாகனத்தில் வெளி வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (இ)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப். 29
உடுப்பிட்டிச் சந்தி, வல்லை வாளி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை, வழிபாடுகளுடன் நிறைவு பெறும்.

(இ-30)

## அலுவலகங்கள் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29
ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட உப அஞ்சல் அலுவலகங்களைத் திறந்து வைக்கும் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறும்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் இந் நிகழ்வில் கலந்து கொண்டு உப அஞ்சல் அலுவலகங்களைத் திறந்து வைப்பார் என்று ஈ. பி. டி. பியின் தீவக அரசியல் அமைப்பாளர் என். மனோகரன் தெரிவித்தார். (உ)

## கசிப்பு உற்பத்தி

கொழும்புத்துறை, ஏப்.29
கொழும்புத்துறை துண்டிப் பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தியும், கள்ளு உற்பத்தியும் தற்போது அதிகரித்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-30)

## நெடுந்தீவில் மின்விநியோக நேரம் அதிகரிப்பு

நெடுந்தீவு, ஏப். 29
நெடுந்தீவில் மின் விநியோகம் மேலும் ஒரு மணித்தியாலத்துக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பிற்பகல் 6.30 மணியில் இருந்து இரவு 10 மணிவரை மின் விநியோகம் இடம்பெறும். முன்னர் இரவு 9 மணி வரையே மின் விநியோகம் இடம்பெற்று வந்தது.

(இ-111)

## 294 ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல்

யாழ்ப்பாணம், ஏப். 29
இராணுவ நடவடிக்கையினால் இதுவரை கைதானோர், காணாமற்போனோர் தொடர்பாக 294 ஆள் கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று யாழ். கைதானோர், காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த மனுக்களில் 75 மனுக்கள் சட்ட நடவடிக்கைக்காக மனித கௌரவத்துக்கான அமைப்பின் செயலாளரும், பிரபல சட்டத்தரணியுமான செல்வி வி. மகேஸ்வரியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளன என்றும் —

இதுவரை மனுத்தாக்கல் தொடர்பாக தொடர்பு கொள்ளாதவர்கள் மனுத்தாக்கல் செய்ய வசதியாக தொடர்பு கொள்ளுமாறும்— அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

(இ-3)

## செல்வாவின் நூறாவது ஜனனதின நிகழ்வுகள் சென்னையில் நடந்தன

சென்னை, ஏப். 29
தந்தை செல்வாவின் நூறாவது ஜனன தின நிகழ்வுகள் சென்னையில் கடந்த வார இறுதியில் இருதினங்கள்நடைபெற்றன.

முதல்நாள்நிகழ்வில் தி. மு. க. சார்பில் சா. கணேசன், ஜனதாதள் சார்பில் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி, பாரதீய ஜனதா சார்பில் இல. கணேசன், இந்திரா காங்கிரஸ் சார்பில் கிள்ளிவளவன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் அமைச்சர் அன்பழகன், தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆர். நல்லக்கண்ணு, இந்திரா காங்கிரஸ் சார்பில் கே. வி. தங்கபாலு முஸ்லிம் லீக் சார்பில் அப்துல் லத்தீவ் ஆகியோர் உரையாற்றினர்.

ஈழத் தமிழ் மக்களுக்கு தந்தை செல்வா ஆற்றிய சேவைகளை அவர்கள் எடுத்துக் கூறினர்.

(இ-3)

## மானிப்பாய் வீதி குண்டும் குழியும்

நவாலி, ஏப். 29
யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி நீண்டகாலமாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக காட்சியளிக்கின்றது. (இ-100)

## வாசகர் திருமுகம்

### தமிழறிஞர்களின் சிலைகள்

புலோலியைச் சேர்ந்த இரு தமிழறிஞர்களுக்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சிலைகளை அமைத்தது. இது வரவேற்கத்தக்க பாராட்டுதற்குரிய, தமிழறிஞர்களை ஏற்றிப் போற்றும் செயல்கள் என்பதையாரும் மறைக்க முடியாது.

மந்திகையில் தென் புலோலியூர் அறிஞர் தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனாரின் சிலையும், கிராமக் கோட்டடியில் புலோலி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகில் மேலைப் புலோலி அறிஞர் சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் சிலையும் அமைக்கப்பட்டுள்ளன.

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளி விழாவை ஒட்டி இருதமிழறிஞர்களின் சிலைகளுக்கும் அண்மையில் வர்ணங்கள் பூசப்பட்டு மெருகேற்றப்பட்டுள்ளன. இது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

ஆனால் இத் தமிழறிஞர்களின் சிலைகள் வெயிலில் காய்ந்தும், மழையில் நனைந்தும் பாதிப்படைகின்றன. அவற்றின் மீது காகங்கள் இருந்து எச்சங்கள் இட்டும் வருகின்றன.

இவை எமது தமிழறிஞர்களை இழிவு படுத்துவதாக அமைந்துள்ளன.

எனவே இத்தமிழறிஞர்களின் சிலைகளைப் பாதுகாக்கவும், அவர்களைக் கௌரவிக்கவும், இச்சிலைகளுக்கு சிமெந்தினாலோ, தகரத்தினாலோ கூரை அமைக்கப்பட வேண்டும்.

மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் நினைவுதினம் இம்மாதப் பிற்பகுதியிலும், தென் புலோலியூர் அறிஞர் தமிழ்த்தாத்தா கந்த முருகேசனின் நினைவுதினம் எதிர்வரும் ஜூன் மாதத்திலும் வருகின்றன.

இந்நேரத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனமோ, ஏதாவது பொது நிறுவனங்களோ இவ்விரு அறிஞர்களின் சிலைக்கும் கூரை அமைக்க முன்வருவார்களா?

ஆடலரசன்.

புலோலி,

### உள்ளூராட்சி ஓய்வூதியம் தாமதமாக வழங்கப்படுவது ஏன்?

உள்ளூராட்சி ஓய்வூதியரின் ஓய்வூதியம் ஒவ்வொரு மாதமும் அந்த மாதக் கடைசி இல்லாவிட்டால் அடுத்த மாதம் என்ற ரீதியிலேயே கிடைக்கிறது. உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட திகதியில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் என்ற ஒழுங்கு எதுவும் இல்லையா?

ஓய்வூதியத்தை நம்பி வாழ்க்கை நடத்தும் குடும்பங்கள், குறிப்பாக இளம் வயதில் ஓய்வுபெற்றவர்கள் தங்களது குடும்பங்களைப் பராமரிக்க முடியாது. கஷ்டப்படுகிறார்கள் வங்கிக்கும் ஓய்வூதியப் பிரிவிற்கும் அலைந்து திரிகின்றார்கள்.

ஏனைய ஓய்வூதியர்களின் கொடுப்பனவுகள் ஓரளவிலேனும் சீராக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் உள்ளூராட்சி ஓய்வூதியர் விடயத்தில் மட்டும் அக்கறை செலுத்தாது இருப்பது ஏன்?

எங்களது நிலை மிகவும் வேதனைக்குரியதாக உள்ளது.

தயவு செய்து உயர் அதிகாரிகள் இந்த விடயத்தில் மனிதாபிமான ரீதியில் அக்கறை எடுத்து உள்ளூராட்சி ஓய்வூதியத்தை தாமதமின்றி பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஜெ. உதயகுமார்
(உள்ளூராட்சி ஓய்வூதியர்)

கரவெட்டி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சு முயற்சியை முன் எடுப்போம்

யாழ்ப்பாணம், ஏப். 29

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சு வார்த்தை முயற்சிகளை முன்னெடுப்போம்.

## புளொட் மே தினப் பிரகடனம்

இப்படி தமிழீழமக்கள் விடுதலைக் கழகத்தின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி தனது மே தினப் பிரகடனத்தில் தெரிவித்துள்ளது.

முன்னணி மே தினத்தை குருநகர் கலையரங்கில் அன்று பி. ப. 3 மணிக்கு 16 தொழிற்சங்கங்களின் ஆதரவுடன் கொண்டாடவிருக்கிறது.

முன்னணியின் ஏனைய மே தினப் பிரகடனங்கள் வருமாறு:-

★ தமிழ் மக்களுடைய அடிப்படை அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அரசியல் தீர்வை பெரும்பான்மையினம் ஏற்றுக் கொள்ளச் செய்வோம்.

★ இலங்கைத்தீவில் தமிழர்கள் சமத்துவமாகவும், சம உரிமையுடனும், கௌரவத்துடனும், பாதுகாப்புடனும் வாழ்ந்து தமது நலன்களை உறுதிப்படுத்திக் கொள்ள வைப்போம்.

★ குடியேற்றங்களால் தினம் தினம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தாயக மண்ணை பாதுகாக்கும் நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுத்துச் செல்வோம்.

★ எமது பாரம்பரிய தாயகப் பிரதேசத்தில் மனிதத்தை காத்து, கல்வியை வளர்த்து, வளத்தைப் பெருக்கி எமது மக்களின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் உரிமைப் போராட்டத்தை உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் முன்னெடுப்போம்.

(இ-3)

## கொடிகாமம்- கச்சாய் வீதியில் கால்நடை அபிவிருத்தி நிலையம்

சாவகச்சேரி, ஏப். 29

சாவகச்சேரி கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையின் அனுசரணையுடன் சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் கொடிகாமம் — கச்சாய் வீதியில் கால்நடை அபிவிருத்தி நிலையம் ஒன்றைத் திறந்து வைக்கவுள்ளது.

இந்த நிலையம் மே மாதம் 2 ஆம் திகதி காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படும். இப்பிரதேசமக்கள் அன்றைய தினமும் திங்கட் கிழமைகள் தோறும் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை தமது கோழிகளுக்கு தடுப்பூசி போடுதல், அம்மைப்பால் கட்டுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-31)

## சுகாதாரம் பேணுவது குறித்து ஐ. நா வின் உதவியுடன் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 29

நமது சமூகத்தில் தற்பொழுது காணப்படும் சுகாதாரம், சுகாதாரத்துடன் இணைந்த பிரச்சினைகளை இனங்காணும் வகையில் ''மீளாக்க நலனியல் செயல் திட்டம்'' என்னும் திட்டம் ஐ. நா. சனத்தொகை நிதியத்தின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் நடைமுறைப் படுத்தப்படவிருக்கிறது.

யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி இ. தெய்வேந்திரன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அத் திட்டச் செயற்பாடுகள் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இத் திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாக சில செயல் அமர்வுகளையும் பயிலரங்குகளையும்நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

தகவல் பரிமாற்றம், கல்வியாற்றல், தொடர்பாடல் ஆகியன பற்றி சமூகத்தில் உள்ள பல்வேறு மட்டங்களில் உள்ளவர்களுக்கு எதிர்வரும் 6 மாதங்களுக்கு போதிக்கப்படும்.

ஆறு இரு நாள் நிகழ்ச்சிகள் மூன்று மாத காலத்திற்குள் நடத்தப்படும்.

இது தொடர்பான முதலாவது நிகழ்ச்சி இன்றும் நாளையும் மாநகரசபை சுகாதார வெளிக்களப் பணியாளர்களுக்கு நடத்தப்படும்.

இத் திட்டத்தின் முதல் பகுதி முடிவுற்றதும், சேவை வசதிகளை விருத்தி செய்யவும், ஏனைய நாடுகளில் காணப்படும் சுகாதார மேம்பாடுகளை நம் மக்களுக்கு கிடைக்கச் செய்யவும் வசதி செய்யப்படும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3)

## தென்னிந்திய திருச்சபையின் "சத்துணவுதிட்டம்

செம்பியன்பற்று, ஏப். 29

நாகர் கோயில் குடத்தனை பகுதியில் தென் இந்தியத் திருச்சபை யாழ். ஆதீனத்தின் ஏற்பாட்டில் சத்துணவுநிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

வடமராட்சிகிழக்கில்நாகர் கோயில் மத்தியில் ஒரு நிலையம் நிறுவப்பட்டு பகலில் 50-க்குமேற்பட்ட போசாக்கு குறைந்த பிள்ளைகள் பராமரிக்கப்படுகின்றனர்.

இதேபோல் குடத்தனைச் சந்தியில் இன்னும் ஒரு நிலையம் நிறுவப்பட்டு இங்கும் சுமார் 150-க்கு மேற்பட்ட சத்துணவு குறைந்த பிள்ளைகள் சேர்க்கப்பட்டு பகலில் பராமரிக்கப்பட்டு வருவதுடன் சத்துணவும் வழங்கப் பட்டுவருகிறது.

இதேவேளை குடத்தனையில் ஆண்டு 8 முதல் 11 வரையான 180 மாணவர்களுக்கு கணிதம் விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் இலவசமாக கற்பிக்கப்படுகின்றன.

(இ-36)

## கலந்துரையாடல்

திருநெல்வேலி, ஏப். 29

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சன சமூக நிலையங்களுக்கான கலந்துரையாடல் கடந்த வாரம் மல்லாகத்திலுள்ள பிரதேச சபைப்பணிமனையில் நடைபெற்றது.

சேதமடைந்த சன சமூக நிலையங்கள் நஷ்ட ஈடுபெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் அப்பொழுது விநியோகிக்கப்பட்டன.

இடம் பெயர்ந்துவேறு இடங்களில் இயங்கி வரும் சன சமூக நிலையங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அவ்வப் பகுதி பிரதேச சபைகளுக்கு இது பற்றி அறிவிக்க வேண்டும் என்று வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவு சன சமூக நிலையங்களின் சமாச தலைவரும் யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவருமான நா. போஜன் தெரிவித்துள்ளார். (இ-135)

# செல்வாவின் தாயகக் கோரிக்கை குறித்து சிங்களத் தலைவர்கள் உணர முற்பட்டுள்ளனர்

### நினைவு நாள் விழாவில் பேராசிரியர் சிற்றம்பலம் உரை

திருநெல்வேலி, ஏப். 29

''தந்தை செல்வா சிங்களத் தலைவர்களுடன் பல ஒப்பந்தங்களை செய்தார். ஆனால் அவையாவும் சிங்களத் தலைவர்களாலேயே நடைமுறைப்படுத்தப்படாது கைவிடப்பட்டன. தாயகக் கோரிக்கை ஏற்கப்படாது விட்டால் இனப்பிரச்சினை தீரப்போவதில்லை என்பதை சிங்களத் தலைவர்கள் தற்போது உணரத்தலைப்பட்டு விட்டனர்.''

யாழ். பல்லைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

தந்தை செல்வா நினைவுக் குழு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடத்திய தந்தை செல்வா நினைவு நாள் நினைவுப் பேருரை நிகழ்வில் பேராசிரியர் சிற்றம்பலம் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்,

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பேராசிரியர் சிற்றம்பலம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

1947ஆம் ஆண்டில் தந்தை செல்வா தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து சென்று தமிழரசுக்கட்சியை ஆரம்பித்தார்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் பற்றி தீர்க்கதரிசனத்துடன் அன்று அவர் வெளியிட்ட கருத்துகள் அக்கால கட்டத்தில் தமிழ் மக்கள் மத்தியில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

பின்னர் நடைபெற்ற சம்பவங்கள் தந்தை செல்வாவின் அன்றைய தீர்க்கதரிசனமான கருத்துகளுக்கு வலுவூட்டின.

### 2 வழிகள்

எமக்கு இரண்டு வழிகள் தான் உள்ளன. ஒன்று சரணாகதி அடைந்து சிங்கள மக்களுடன் சங்கமமாவது. இரண்டாவது எமது பாரம்பரிய தாயகத்தை பாதுகாத்து மொழியுரிமை பெற்ற தனித்துவமான இனமாக வாழ்வது என்று அன்று அறுதியிட்டு தந்தை செல்வா கூறினார்.

தமிழினத்தின் இந்த ஜீவாதாரமான உரிமைகளை வென்றெடுப்பதற்காக அவர் வடக்கு - கிழக்கு மக்களிடையே ஒற்றுமை உணர்வை ஏற்படுத்த கிழக்கு மாகாணத்தவர்களுக்கும் தமிழரசுக் கட்சியில் தலைமைத்துவ பதவிகளை வழங்கினார். முஸ்லிம் மக்களையும் தம்முடன் இணைத்துக் கொண்டார்.

### மலையக மக்கள் உரிமை

மலையக மக்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்தவர் தந்தை செல்வா.

அக்கால கட்டத்திலிருந்த தமிழ்த் தலைவர்களில் சிலர் பட்டம் பதவிகளுக்காக தமிழினத்தை காட்டிக்கொடுத்த வேளையில் இதய சுத்தியோடு சத்தியத்தின் அடிப்படையில் தந்தை செல்வா செயற்பட்டார்.

எவராலும் விலை கொடுத்து வாங்க முடியாத தலைவராகத் திகழ்ந்த தந்தை செல்வா உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவி வகிக்க தமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தையும் உதறித் தள்ளினார்.

### தனிச்சிங்கள சட்டம்

1956 ஜூன் மாதத்தில் தனிச்சிங்கள சட்டம் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப் பட்டபோது அதனை எதிர்த்து கொழும்பு காலி முகத்திடலில் ஏனைய தலைவர்களுடன் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார்.

அப்போது சிங்களக் காடையர்களால் அவரது மகன்மார் கடுமையாக தாக்கப் பட்டபோதும் —

அமிர்தலிங்கம் தாக்கப்பட்டு படுகாயமடைந்த போதும்— தளம்பாது உறுதியுடன் இலட்சியப் பற்றுடன் செயற்பட்டார்.

செவிப்புலன் குறைவு, பேச்சுத்திறன் குறைவு ஆகியவற்றின் பாதிப்புகள் இருந்த போதிலும் மனஉறுதியுடன் சத்திய வழியில் நின்று தமிழினத்துக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் தந்தை செல்வா.

இராஜதுரை, இராசமாணிக்கம், வன்னிய சிங்கம் போன்ற இலட்சியப்பற்றுமிக்கவர்கள் இவரது வழிகாட்டலில் செயற்பட்டனர்.

சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்த பின்பும் தனிநாடு கோரிக்கையை முன்வைத்த பின்பும் அவரின் செயற்பாடுகள் தமிழினத்தின் பரிமாண வளர்ச்சியை எடுத்துக் காட்டின.

தனிநாட்டுக் கோரிக்கையை இறுதியாக முன்வைத்த போதிலும் அவர் பேச்சுவார்த்தைக்கான கதவை மூடவில்லை. சிங்களத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிமை பெற முடியும் என்ற நம்பிக்கையை இழந்த நிலையிலும் அவர் பேச்சுவார்த்தைக்கு தயாராகவே இருந்தார்.

அவர் ஆரம்பித்து வைத்த உரிமைப் போராட்டம் வேறு வடிவில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. அவரது இலட்சியக்கனவுகள் விரைவில் நிறைவேற வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும்'

இப்படி அவர் கூறினார்.

### பல்கலைக்கழகம் பெற வாதாடியவர்

இந் நிகழ்வுக்கு தலைமை வகித்த யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். பொ. பாலசுந்தரம் பிள்ளை உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும் என்று வாதாடி வந்தவர் தந்தை செல்வா.

அவரின் கோரிக்கைக்கு அமைய யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதுடன் கிழக்கிலும் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

சிங்கள குடியேற்றத்திட்டங்கள் தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்டு தாயக பிரதேசம், பாரம்பரிய இடங்கள் பறிபோவதை தடுத்து நிறுத்த அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் முக்கியத்துவம் மிக்கவை திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை கட்டுப்படுத்துவதில் அவரது செயற்பாடு ஓரளவு வெற்றியளித்தது என்றே கூற வேண்டும். இப்படி அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைதலைவர் பேராசிரியர் கலாநிதி நா.சுப்பிரமணியன் 'அறிவியல் தமிழ்' தமிழ்மொழி பயில் நிலையின் புதிய எல்லைகள் என்னும் தலையங்கத்தில் நினைவுப் பேருரையை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது—

தமிழர் உரிமைக்காக தன் இறுதி மூச்சு வரை சிந்தித்து செயற்பட்டு வந்த பெருமகன் தந்தை செல்வா. தமிழ் மொழி ஆட்சி மொழியாக வேண்டும் என்ற எண்ணத்தை இறுகப்பற்றி நின்றவர் அவர்.

அவர் பேண விழைந்த தமிழ் மொழியின் புதிய வளர்ச்சி நிலை ஒன்றைக் கோடிட்டுக் காட்டும் வகையில் அமைந்த அறிவியல் தமிழ் பற்றி இங்கு உரை நிகழ்த்தி அவரது நினைவுகளுக்கு காணிக்கையாக்குகின்றேன்.

### அறிவியல் தமிழ்

தமிழை இயல், இசை, நாடகம் என மூவகைப்படுத்தி முத்தமிழ் என வழங்குவது வழக்கம். அண்மைக்காலத்தில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக நான்காவதாக அறிவியல் தமிழ் என்ற ஒரு புதிய வகையும் வழக்குக்கு வந்துள்ளது. பல்வேறு அறிவுத் துறைகளையும் எடுத்துரைக்கப் பயன்படுத்தப்படும் நிலையிலான தமிழ் என்பதே ''அறிவியல் தமிழ்'' என்பதன் விளக்கமாகும்.

உலகலாவிய ரீதியில் இஸ்ரேல் நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வழக்கில்லிருந்து பின்பு செயலிழந்த நிலையிலிருந்த ''கிபுறு'' என்ற மொழி ஐம்பது வருட காலத்தில் விஞ்ஞான மொழியாக வளர்ச்சி அடைந்தது. ''அறிவியல் தமிழ்'' ஆக்க முயற்சிகள் அண்மைக்காலம் வரை எய்திய வளர்ச்சி மிகவும் பெரியது.

பிறமொழிப் பதங்களுக்குரிய பொருத்தமான கலைச் சொல்லாக்க முயற்சிகளில் யாழ். பல்கலைக்கழகம் உரிய வகையில் எதிர் காலத்தில் ஈடுபட்டு அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு தொண்டாற்ற வேண்டும்.

இது தொடர்பாகஆறுகோடி தமிழ்மக்கள் வாழும் தமிழ் நாட்டு பல்கலைக்கழகங்கள் ஏற்கனவே பல ''அறிவியல் தமிழ்'' சொற்களை உருவாக்கிய போதிலும் மேற்கொண்டும் இவ் விடயத்தில் முயற்சிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இப்படி அவர் கூறினார்.

(இ-135-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனையாகின்றது

கவின் கலை அழகியற்கல்வி புது முறைச் சித்திர பாட, 1000 வினாக்களும் விடைகளும் ரூபா 75/-ஆக்கியோன்: எஸ். தங்கராசா(புது முறைச் சித்திர ஆசிரியர், நெல்லையூர்), ஒவியக்கழக வெளியீடு. [46528]

வரலாறு ஆண்டு — 9 அலகு ரீதியான முழு பாடத்திட்ட வினா விடை, ரூபா 30/- ஆக்கம்;கே. எஸ். முத்துலிங்கம், எல்லா புத்தக சாலைகளிலும் கிடைக்கும். [46529]

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (46548)

## தவறிவிட்டது

சிவநாதன் சந்திரவதனன் என்பவருடைய விசேடஅடையாள அட்டை சுந்தர்மடம் சந்திக்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள். 36, கஸ்தூரியார் வீதியில் அமைந்திருக்கும் அருண் கிறீம் கவுசுடன் தொடர்பு கொள்ளவும். [46549]

## ஆண்டு - 5 புலமைப்பரிசில்

ஆண்டு 5 புலமைப்பரிசில் புதிய பரீட்சைத்திட்டத்திற்கு அமைவான மாதிரி பயிற்சிகள் விடைகளுடன் ஒவ்வொரு வாரமும் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.[46520]

## தங்குமிடவசதி

கண்ணியமான 4 குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்தவர் வசிப்பதற்குத் தேவையான வசதிகளைக் கொண்ட வீட்டில் தனியறையுண்டு. விறாந்தை, சமயலறையைப் பயன்படுத்த வசதி செய்து கொடுப்பதுடன் வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு மாதா மாதம் சிறு தொகைப்பணமும் வழங்கப்படும். கதிரித்தம்பி, 16/5, சீனியர்லேன். வண்ணார்பண்ணை. [46547]

# பருவ மழை

தென். மேற்கு பருவப் பெயர்ச்சிக்காற்றால் ஏற்படும் மழை அடுத்தமாதம் 3 ஆம் வாரத்தில் பெய்யும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் போல் அல்லாமல் பொய்க்காமல் மழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பருவப் பெயர்ச்சி மழை பொய்த்ததால் வரட்சி ஏற்பட்டிருந்தது. (இ-3-150)

**A/L 97**
வணிகப் புள்ளிவிவரவியல்
**துரித மீட்டல்**
வினா-விடை வகுப்பு
இலகுவான சித்திக்கு வழிகாட்டல்
BY:
S. திரிகரன் (B.Sc)
ஆரம்பம்: 2-5-97 (3மணி)
அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்

**A/L 98**
நிகழ்தகவு
ஆரம்பம்: 3-5-97 காலை (7மணி)
C. C. A.
யாழ்ப்பாணம். (46546)

**POSTGRADUATE DIPLOMA IN PUBLIC ADMINISTRATION 1996/97**

**UNIVERSITY OF JAFFNA**

Applications are invited for admission to the above mentioned course, which is to be started in May 1997. Admission is open to graduates of any recognized university. The course is of one year duration and also fee levying.

Prospectus and application forms (Rs. 50.00) available with Assistant Registrar, Academic Branch, University of Jaffna.

**REGISTRAR**
University of Jaffna.
1997-04-23
(C/632)

# வர்த்தக மாணவருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.29

யாழ் மத்திய கல்லூரி வர்த்தக மாணவர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள 1997 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றும் வர்த்தக மாணவர்களுக்கான மூன்று நாள் கருத்தரங்கு நேற்று முதல் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பொருளியல் (செலவுக்கோட்பாடு) பற்றி விரிவுரையாளர் உதயகுமார் கருத்துரையாற்றுவார்.

நாளை புதன்கிழமை முகாமைத்துவம் பற்றி விரிவுரையாளர் ஏ. சுப்பிரமணியம் கருத்துரையாற்றுவார். அனைத்து பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்வதற்கு ஏற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-4)

# 21 அதிரடிப்படையினர் மீதான வழக்கு மேல் நீதிமன்றில் நடக்கும்

## அரச சட்டத்தரணி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 29

பொல்கொட, அனவை, தியவன்னஓயா ஆகிய ஏரிகளில் 21 தமிழ் இளைஞர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படவிருக்கிறது.

அரச சட்டத்தரணி கொட்டகொட மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 21 விசேட அதிரடிப் படையினருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தும் —

பின்னர் வழக்கு விசாரணையில் சட்டமா அதிபர் சமுகமளிக்காததால் விசாரணைப்பட்டியலில் இருந்து வழக்கு அகற்றப்பட்டதும் — தெரிந்தவையே;

விசாரணைப்பட்டியலில் இருந்து வழக்கு நீக்கப்பட்டதுக்கு வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்று அர்த்தம் இல்லை. மேல் நீதிமன்றத்தில் கடத்தல், தவறான முறையில் தடுத்து வைத்தல், கொலை ஆகிய குற்றச்சாட்டில் இவர்களுக்கு எதிராக வழக்கு விசாரணை நடைபெறும் என்றும் சட்டத்தரணி கொட்டகொட தெரிவித்தார்.

அதே சமயம் இந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டதுக்கான காரணத்தை அறியத் தருமாறு அரச நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பீரிஸிடம் கேட்டுள்ளார். (இ-3-150)

# மனித முன்னேற்ற நடுநிலையம் உதவி

சாவகச்சேரி, ஏப். 29

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித விகோரியார் தேவாலய புனித வின்சன் டி போல் சபையினரால் நடத்தப்படும் பணிகளுக்கென யாழ்ப்பாணம் மனித முன்னேற்ற நடு நிலையம் பத்தாயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. (இ-31)

**தும்பளை நெல்லண்டைப் பத்ரகாளி அம்மன் கோயில்**

# வருடாந்தப் பொங்கல்

**வைகாசி - 1997**

மேற் கூறிய பொங்கல் ஈசுர வருஷம் சித்திரை மாதம் 19ஆம் நாள் **02 - 05 - 97** வெள்ளிக்கிழமை விளக்கு வைப்புடன் ஆரம்பமாகி சித்திரை 27ஆம் நாள் **10 - 05 - 97** சனிக்கிழமை காலை வெளிமடையுடன் நிறைவு பெறும்.

அத்தருணம் தேவியின் அடியார்களாகிய நீங்கள் ஆலயத்துக்கு வருகை தந்து அம்பாளின் அனுக்கிரகத்தைப் பெற்று ஏகுமாறு வேண்டுகிறோம்.

குறிப்பு:

இப்பொங்கல் விழாவை ஒட்டி பொருள்கள், பண உதவி செய்ய விரும்பும் அடியார்கள் வழமை போல் இவ் ஆலய தரும பரிபாலன சபையின் அலுவலகத்தில் பொருளாளர் திரு. சி. தங்கவடிவேலுவிடம் அவற்றைக் கொடுத்து பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளும் படி சபை சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

**சி. தங்கவடிவேலு**
பொருளாளர்
தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில்
தர்ம பரிபாலன சபை.
(46544)

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னையின் மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 09 — 11 — 1920 | 09 — 05 — 1988 |

**அமரர்**

## நாகலிங்கம் பாலகிருஸ்ணர் பத்தர்

(மணியகாரன் வீதி, தெல்லிப்பழை)

**திதி: 29 - 04 - 1997**

''நெருநலுள னொருவன் இன்றில்லை யென்னும் பெருமை யுடைத்தி வுலகு''

ஆண்டுகள் எத்தனை சென்றாலும்— எம்மை ஆண்டு நிற்கின்ற உங்கள் நினைவுகள் அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பூநாறி ஒழுங்கை,
கொக்குவில்.
(46744)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**ஈராண்டுப் பகுதி நேரப் பட்டப்பின் கல்வித் தகைமை கற்கைநெறி 1995/96**

## புதிய அனுமதி

அரசாங்கப் பாடசாலைகளில் கற்பிக்கும் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 1997-05-31 இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பங்களைப் பெறவிரும்புவோர் நிதிக்கிளையில் ரூபா 20/- செலுத்திப் பற்றுச்சீட்டினைக் கல்விக்கிளையில், உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 1997-6-20 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

தெரிவு செய்யப்படுவோர் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து 25 மைல் சுற்றாடலில் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கை நெறிக்குப் பதிவு செய்யும் பொழுது இவ்விடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1997-05-31 ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

**பதிவாளர்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
1997-04-23.
(சி-630)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

**முழுநேரப்பட்டப் பின் கல்வித் தகைமை கற்கை நெறி 1995/ 96**

## புதியஅனுமதி

தனியார் பாடசாலைகளில் கற்பிக்கும் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 1997 - 05 - 31 இல் 50 வயதுக்கு குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்:

இக்கற்கை நெறி தொடர்பான விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் நிதிக்கிளையில் ரூபா 20/- செலுத்திப் பற்றுச்சீட்டினைக் கல்விக்கிளையில் உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறு பேற்றின் அடிப்படையில் நடத்தப்படும் நேர்முகத் நேர்வு ஒன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 1997 - 06 - 20 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்களை உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1997 – 05 - 31 ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

**- பதிவாளர்**
யாழ்ப்பாணப், பல்கலைக்கழகம்.
1997 – 04 - 23
(சி-631)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# உதயன்

## முட்டுக்கட்டை நாடகம்!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காணப்பட வேண்டுமாயின், அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியே ஆக வேண்டும் என்று பல திசைகளிலும் இருந்தும் வலுவான குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளதாக நேற்றுத் தான் இப்பத்தியில் எழுதியிருந்தோம்.

ஆனால் விடுதலைப் புலிகளுடன் இப்போதைக்குப் பேச்சை ஆரம்பிக்கக் கூடாது என்று மல்வத்த பீட மகாநாயக்கர் தெரிவித்திருக்கிறார். விடுதலைப்புலிகளுக்கான சகல விநியோகப் பாதைகளையும் துண்டிக்கும்வரை அவர்களுடன் பேச்சை ஆரம்பிக்கக் கூடாது என்பது மகாநாயக்கரின் கருத்து.

கருத்துச் சொல்லும் உரிமை எல்லோருக்கும் உண்டு. ஆனால் பொறுப்பான அல்லது மதிப்புக்குரிய பதவிகளில் உள்ளோர் கருத்து வெளியிடும் போது ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும் என்றே பொதுவாக எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த நாட்டில்தொடர்ந்து கொண்டிருக்கும் உள்நாட்டுப் போரினால் நாடு சீரழிந்து வருகிறது. தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் கணிசமான அளவு நேரடியாகவும், மிகப் பெரிய அளவில் மறைமுகமாகவும் பாதிக்கப்படுகிறார்கள். உயிர், உடைமைச் சேதங்களும், மக்கள் அவலங்களும் நாளாந்தம் பெருகுகின்றன. நாட்டின் பெருளாதாரம் மேன்மேலும் வலுவிழந்து பலவீனமடைகிறது. மொத்தத்தில் நாடு பெரும் நெருக்கடிக்குள் நிரந்தரமாகச் சிக்கியுள்ளது.

இந்த நெருக்கடியிலிருந்தும் பெரும் அழிவிலிருந்தும் நாடு விடுபட வேண்டுமானால், மீட்கப்பட வேண்டுமானால் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். போர் மூள்வதற்குக் காரணமாக இருந்த இனப்பிரச்சினைக்கு நீதியான, நியாயமான, நிரந்தரமான தீர்வு காணப்பட்டாக வேண்டும்.

இனப்பிரச்சினைக்குரிய தீர்வு சிங்கள — தமிழர் தரப்புகளிடையே இணக்கம் ஏற்படும் பட்சத்தில் மட்டுமே சாத்தியமானது. அத்தகைய ஓர் இணக்கத்தைக் காண்பதற்கு இரு தரப்பும் பேச்சுவார்த்தைகள், கலந்தாலோசனைகளில் ஈடுபட வேண்டும். அந்த வகையில் போரில் ஈடுபட்டுள்ள அரசு, விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்புகளுக்கு மிடையில் பேச்சு அவசியம்.

ஆக்கபூர்வமாகச் சிந்திக்கும் எந்த மனிதனும் ஏற்றுக் கொள்ளும் விடயம் இது. ஆனால் பெரிய பௌத்த பீடம் ஒன்றின் மகாநாயக்கர் வெளியிட்டிருக்கும் கருத்து, பேச்சுக்கான சூழ்நிலை உருவாகாமல் தடுக்கும் தன்மையுடையது. உண்மையில் ''குழப்பங் காய்ச்சி'' இயல்பானது.

அத்தோடு தமிழர்கள் மீது தீர்வு ஒன்றைத் திணிக்கும் உள்நோக்கம் கொண்டது என்பதிலும் சந்தேகமில்லை.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இடப்படும் ''முட்டுக்கட்டை நாடகம்'' இம்முறையும் அரங்கேற ஆயத்தமாகிறது என்பதே யாம்;

## துப்பாக்கி ரவையுடன் கைதான விளையாட்டுப் பயிற்சியாளர்

கொழும்பு, ஏப். 29

தென்னாபிரிக்கா செல்வதற்காகக் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குச் சென்ற இலங்கையர் ஒருவரிடம் இருந்து பாவிக்கப்படாத 0. 22 ரக துப்பாக்கி ரவை ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

அதையடுத்து கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட அவர், நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

தென்னாபிரிக்காவில் உள்ள ஒரு விளையாட்டுக் கழகத்தில் பயிற்சியாளராகப் பணியாற்றும் இவர், விடுமுறைக்காக இலங்கை வந்து திரும்பும் போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மெய்வல்லுநர் போட்டிகளின் போது ஓட்ட ஆரம்பங்களுக்குப் பாவிக்கப்படும் தொடக்குநர் பிஸ்டல்களுக்கு 0. 22 ரக வெற்றுத் தோட்டா பாவிப்பது தெரிந்ததே. (உ-3-150)

யாழ். ஆஸ்பத்திரியில்

## கிணற்றில் நீருடன் ஊறும் எரிபொருள்!

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ். போதனா வைத்தியசாலையின் கிணறு ஒன்றின் நீரில் எரிபொருள் கலந்திருப்பதால் அந்தக் கிணற்றைப் பாவிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்றுக் காலையில் இருந்து இக்கிணற்றினுள் கறுப்பு நிறத்தில் எரிபொருள் மிதக்கக் காணப்பட்டதை அடுத்து இக்கிணற்றை இறைத்துத் துப்புரவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது.

நீர் வற்ற இறைத்தபின்பு ஊறிய நீரிலும் எரிபொருள் தொடர்ந்து வருவது காணப்பட்டது.

ஆஸ்பத்திரிச் சுற்றாடலில் உள்ள எரிபொருள் நிலையம் அல்லது 'சேவிஸ்' நிலையப் பகுதியில் இருந்து இந்தக் கசிவு ஏற்பட்டு, நீரூற்றில் கலந்திருக்கலாமோ எனச் சந்தேகிக்கப்பட்டது.

இக்கிணறு தற்போது பாவனையில் இருந்து விலக்கப்பட்டுள்ளது. (உ)

## முழு நேரம் தொழில்புரிவோரை பல்கலையில் அனுமதிக்கக்கூடாது

### அரசிடம் ஆலோசனை தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.29

''முழு நேரம் தொழில் புரிபவர்களை பல்கலைக் கழகங்களில் உள்வாரி மாணவர்களாக அனுமதிக்கக் கூடாது''

பல்கலைக்கழகக் கல்வி தொடர்பாக ஆராய்ந்து வரும் தேசியகல்வி சீர்திருத்த ஆணைக்குழு அரசிடம் சமர்ப்பித்துள்ள ஆலோசனையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

முழு நேர தொழில் புரிபவர்களுக்கு வெளிவாரிப் பிரிவுகளிலும், திறந்த பல்கலைக் கழகங்களிலும் அனுமதி வழங்கவேண்டும் என்றும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (இ-3-150)

## சுகாதார திணைக்கள அலுவலக கட்டடம் அமைப்பதில் தாமத நிலை

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கான அலுவலகம் ஒன்றை அமைப்பதில் தொடர்ந்து தாமத நிலை இருந்து வருகிறது.

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் இந்த அலுவலகத்தை அமைப்பதற்கான வேலைகள் இன்னமும் ஆரம்பமாக வில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு சொந்தமாக யாழ். ஆஸ்பத்திரி வீதிக்கு முன்பாகவும், கோட்டைப் பகுதியிலும் இடங்கள் இருந்து வருகின்றன.

இவ்விரு இடங்களிலும் எந்த இடத்தில் அலுவலகத்தை அமைப்பது என்பதில் ஏற்பட்டுள்ள இழுபறியினால் கட்டட வேலைகளை ஆரம்பிக்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-173)

## புனரமைப்புச் செய்யப்பட்ட வேலணை கிராமிய வைத்தியசாலை

### கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது

திருநெல்வேலி, ஏப். 29

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் வழங்கப்பட்ட மூன்று லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியைக் கொண்டு புனரமைப்பு செய்யப்பட்ட வேலணை கிராமிய அரசினர் வைத்தியசாலை கட்டட திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. பலாலி இராணுவ மேஜர் ஜெனரல் பி. ஏ. கருணதிலகா புனரமைப்பு செய்யப்பட்ட கட்டடத்தை சம்பிரதாய முறைப்படி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனை நிர்வாகஉத்தியோகத்தர் எஸ். மகேந்திரன் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகப் பிரதிநிதிகள் உட்பட பலர் இத்திறப்பு விழாவில் கலந்து கொண்டனர்.

'அங்கு வந்த நோயாளர்களுக்கு ஜீவாகாரமும் வழங்கப்பட்டது.

இதேவேளை மருந்துக் கலவையாளர், குடும்பநல சேவையாளர் ஆகியோரும் இவ் வைத்தியசாலைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-135)

### நாளை

**சித்திரை 17**

**புதன்கிழமை**

திதி: அட்டமி

மாலை 5. 31 வரை.

நட்சத்திரம்: திருவோணம் முன் இரவு 7.03 வரை.

சுபநேரம்: 4. 28 – 5.58

ராகுகாலம்: [illegible]

(எல்லாம் இலங்கைப் பழைய நேரப்படி)

## பருத்தித்துறைக்கு தொலைபேசி வசதி

பருத்தித்துறைக்கும் வெளி மாவட்டங்களுக்கும் இடையிலான தொலைபேசித் தொடர்பு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பான கோபுரம் அமைக்கும் பணி தொலைத் தொடர்புப் பரிசோதகர் தலைமையிலான குழுவினரால் பூர்த்தியாக்கப் பட்டுள்ளதுடன், பரீட்சார்த்தமாக தொலைபேசித் தொடர்பும் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இந்தத் தொலைபேசியைப் பருத்தித்துறை தபாலகத்துக்கு வழங்குவதா அல்லது வேறு பொருத்தமான இடத்தில் இணைப்பதா என இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. எங்கு இணைப்பது எனச் சம்பந்தப்பட்டவர்கள் தீர்மானித்ததும் உடனடியாகத் தொலைபேசி வசதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறைக்கான தொலைபேசித் தொடர்புகளை வழங்கும் பணி முடிவடைந்ததும் சாவகச்சேரிக்கான தொலைத் தொடர்பு வசதிகளை வழங்கும் பணி மேற்கொள்ளப்படும் என தொலைத் தொடர்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-10)

## பேத்தாளை அகதி முகாமை அகற்ற படையினர் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 29

வாழைச்சேனையில் உள்ள பேத்தாளை அகதி முகாமை அகற்றுமாறு படையினர் மட்டக்களப்பு அரச அதிபரிடம் கேட்டுள்ளனர்.

இந்த அகதிமுகாம் அமைந்துள்ளதால் வாழைச்சேனை நகருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும்—

படையினர் மீது தாக்குதல் நடத்திவிட்டு புலிகள் இந்த முகாமில் தஞ்சம் அடைவதாகவும் —

படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அகதி முகாமில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் 'பாஸை' விடுதலைப் புலிகள் வைத்துள்ளனர் என்றும்—

தேடுதல் நடத்தும் படையினரிடம் அந்தப் பாஸைக் காட்டி அவர்கள் தப்பி விடுவதாகவும் —

படையினர் தரப்பில் மேலும் கூறப்பட்டது.

அண்மையில் படையினர் அந்த முகாமில் நடத்திய தேடுதலின்போது பங்கர்கள் அங்கு அமைக்கப்பட்டிருந்ததைக் கண்டனர் என்றும் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

1990 ஆம் ஆண்டு முதல் இயங்கும் இந்த முகாமில் 800 அகதிகள் உள்ளனர் என்றும்—

அரசாங்கம் இந்த அகதி முகாம் பராமரிப்புக்கு மாதாந்தம் 25 லட்சம் ரூபாவை செலவிட்டு வருகிறது என்றும் —

அரச அதிபர் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3-150)

## இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 29

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று கப்பல் சேவை இடம் பெறும் என்று யாழ்.. சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

சிவில் அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 544 முதல் 560 வரை உள்ளவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## தேசிய கல்வி நிறுவக மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஏப். 29

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா பகுதி-1, பகுதி-2 பரீட்சைக்கு விண்ணப்பித்த யாழ். இந்துக் கல்லூரி நிலையத்தைச் சேர்ந்த மாணவர்களை எதிர்வரும் 3 ஆம் திகதி அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் கேட்டுள்ளார். (ஐ)

## இருபாலையில் சூட்டுச் சம்பவம்

இருபாலையில் நேற்றுக் காலை இடம் பெற்றதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தார் எனத் தெரிவித்து சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இச்சடலம் இனம் காண்பதற்காக யாழ்.ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (உ)

தயவு தாட்சண்யமின்றி

## புலிகளுக்கு எதிராக தமிழகத்தில் நடவடிக்கை

### கருணாநிதி கூறுகின்றார்

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரபட்சமற்ற முறையிலும், தயவுதாட்சண்யம் இன்றியும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக முதலமைச்சர் மு. கருணாநிதி கூறியிருக்கிறார்.

தமிழக சட்டப் பேரவையில் நேற்று நிதி ஒதுக்கீடு பிரேரணை ஒன்றின் மீது நடந்த விவாதத்துக்குப் பதில் அளித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அண்மையில் இலங்கையில் இருந்து இராமேஸ்வரத்துக்கு அகதிகளுடன் சேர்ந்து வந்த இரு விடுதலைப்புலிகள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். (உ-3)

ஊடுருவலைத் தடுக்க

## தமிழகக் கடலோரத்தில் தீவிர விமான ரோந்து

சென்னை, ஏப். 29

இலங்கையில் இருந்து தீவிரவாதிகளும், கடத்தல் காரர்களும் தமிழ் நாட்டுக்குள் ஊடுருவுவதைத் தடுப்பதற்காக மண்டபம் முதல் இராமேஸ்வரம் வரையான கடலோரப் பகுதியில் விமான ரோந்துப் பணி தீவிரப்படுத்தப்படவிருக்கின்றது.

இதற்காக சிறிய விமானங்களும், பெரிய ஹெலிக்கொப்டர்களும் தூத்துக்குடியில் இருந்து இனிமேல் செயற்படும்.

இந்திய கடலோரப் பாதுகாப்புப் படையின் இயக்குநர் வைஸ் அட்மிரல் ஆர்.எஸ். கணேஷ் இத் தகவல்களை வெளியிட்டார். (உ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அளவெட்டி

# புனித சூசையப்பர் திருநாள்

**காலம்: மே 1, வியாழக்கிழமை**
**காலை 9-30 மணி**

இராணுவ அனுமதி பெறப்பட்டுள்ளது.

★ விஷேட பஸ் காலை 8-00 மணிக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து புறப்படும்.

**மறைக்கோட்ட குரு முதல்வர்**
இளவாலை.

(46550)

# கண்ணீர் மலர்களைக் காணிக்கையாக்குகின்றோம்

எமது கல்லூரியின் கணக்கியல், வணிகப்புள்ளிவிவரவியல் ஆசிரியையான

**திருமதி ஸ்ரீரமணி அருள்வேல்**
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி**
**செல்வராணி சுப்பிரமணியம்**

அவர்களின் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியும், கவலையும் அடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**97 வர்த்தகப்பிரிவு மாணவிகள்,**
**யாழ். இந்துமகளிர் கல்லூரி,**
யாழ்ப்பாணம்.

(46559)

# கண்ணீர் அஞ்சலி

## செல்வராணி சுப்பிரமணியம்

எமது கல்லூரியின் கணக்கியல் ஆசிரியரான
திருமதி அருள்வேல் அவர்களின் தாயார்

**திருமதி செல்வராணி சுப்பிரமணியம்**

25 - 04 - 97 அன்று காலமானதையிட்டு துயருறும் அவரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**98 வர்த்தக பிரிவு மாணவிகள்**
**யாழ். இந்து மகளிர் கல்லூரி,**
யாழ்ப்பாணம்.

(46560)

# மரண அறிவித்தல்

## யோசவ் வின்சன்ட் பொன்னையா

(ஆய்வுகூட உதவியாளர், புனித பத்திரிசியார் கல்லூரி)

யோசவ் வின்சன்ட் பொன்னையா அவர்கள் 28- 04- 97இல் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரு. சிறில் பொன்னையா—திருமதி மரியம்மா பொன்னையா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை, திருமதி லேனம்மா சந்தியாப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், மேரி அல்போன்சா (கமலா)வின் அன்புக் கணவரும், றொஷேல் (ஆண்டு11 மாணவி, திருக்குடும்ப கன்னியர் மடம்), அனஸ்ரி (மாணவன், புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான ஸ்ரிபன் பொன்னையா, திருமதி மாகிறற் துரைசிங்கம் மற்றும் திருமதி பிரான்சிஸ்கா (சிங்கப்பூர்), அருட்தந்தை லூயிஸ் பொன்னையா O. M I (மடு), திரு விக்டர் பொன்னையா (கொழும்பு), அருட்செல்வி லைசா A.C (கல்முனை) அருட்செல்வி திரேஸ் கிறேஸ் A. C. (மட்டக்களப்பு) அருட்செல்வி மரிய றெஜினா A. C (பொறளை), ஜோர்ஜ் பொன்னையா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி திரேஸ் அந்தோனியாப்பிள்ளை (கனடா), திருமதிமேரி றீற்றா (தச்சனா மடு), திரு. யேசுதாஸன் (பொறுப்பதிகாரி, பொலீஸ் இலாகா, கொழும்பு), திருமதி லூட்ஸ் மேரி (லண்டன்), காலஞ்சென்ற திருமதி நேசராணி மற்றும் திருமதி மரியநாயகி (நீர்கொழும்பு), குவென், அஞ்சலா, சறோ ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற அருட்தந்தை நிக்களஸ் O. M. I. மற்றும் திருமதி திரேசம்மா யோசப்பின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மேரி அல்போன்சா
(மனைவி)

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(46562)

**மேலும் மரண அறிவித்தல்கள் 2ஆம் பக்கத்தில்**

# பேச்சுவார்த்தை மூலம்...

(முதலாம் பக்கத் தொடர்)

செ. பத்மநாதன், யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் மற்றும் யாழ். செயலக அதிகாரிகள் ஆகியோர் சகிதம் நெதர்லாந்துத் தூதுக் குழுவினர் யாழ். ஆயரைச் சந்தித்தனர்.

யாழ்ப்பாண நிலைவரம், யாழ். மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகியவை குறித்து தூதுக்குழுவினர் யாழ். ஆயரிடம் கேட்டறிந்தனர். அப்போது அவர்கள் எழுப்பிய வினாக்களும் யாழ். ஆயர் அளித்த பதிலின் சுருக்கமும் வருமாறு:-

கேள்வி:- ''சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சு மூலம் தீர்வு காண்பது குறித்து அடிக்கடி செய்திகள் வெளிவருகின்றன. இது பற்றி உங்கள் கருத்து என்ன?''

பதில்:- ஆம் இந்த விடயத்தில் நிச்சயமாக மத்தியஸ்தம் தேவை. ஏனெனில், இரு தரப்பினரிடையேயும் மற்றவர் குறித்து சந்தேக மனப்பான்மை உள்ளது. எனவே, இப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க மத்தியஸ்தம் அவசியமாகின்றது.

கேள்வி:- இவ்விடயத்தில் நாம் எவ்வாறு உதவ முடியும்?

பதில்:- வெளிநாட்டுத் தூதரகங்கள் அரசியல் தீர்வு தொடர்பாக அரசாங்கத்திற்கு அடிக்கடி நெருக்குதல் கொடுக்க வேண்டும். அப்போதுதான் சிறுபான்மை இன மக்கள் நிம்மதியாக வாழ முடியும்.

### யாழ். மக்களின் நிலைமை

கேள்வி:- யாழ்ப்பாணத்தில் மக்கள் சமாதானத்துக்காக என்ன செய்கிறார்கள்?

பதில்:- யாழ்ப்பாண மக்கள் ஓர் இராணுவ நிர்வாகத்தின் கீழ் — இராணுவக் கட்டுப்பாட்டின்கீழ் அமைதியான சூழ்நிலை என்ற விவரிக்க முடியாத ஒரு சூழ்நிலையிலேயே— வாழ்ந்து கொண்டிருக்கின்றனர், நாளாந்தம் எப்படி சீவியம் நடத்துவது என்பதே அவர்களின் சிந்தனை. எனவே, இதுபற்றி சிந்திப்பதற்கு அவர்களுக்கு அவகாசம் இல்லை. அத்துடன் தமது கருத்துக்களைவெளியிடவோ அரசியலில் ஈடுபடவோ அவர்களுக்கு தகுந்த வாய்ப்பும் இல்லை.

கேள்வி: வன்னியிலிருந்து மக்கள் படகுகள் மூலமாக யாழ்ப்பாணம் வந்து கொண்டிருப்பதாக அறிகின்றோம். புலிகளின் பிடியிலிருந்து தப்பவே இவ்வாறு மக்கள் வருவதாகவும் கூறப்படுகின்றது. இதன் பின்னணியில் ஏதும் அரசியல்காரணங்களுண்டா?

பதில்: அரசியல் காரணங்கள் என்று ஒன்றும் இல்லை. வன்னியில் உணவுப் பற்றாக்குறை, மருந்துப் பொருள்கள் பற்றாக்குறை, குடி தண்ணீர் பிரச்சினை என்று பல பிரச்சினைகள் உள்ளன. அத்துடன் இராணுவமும் இதற்கு அனுமதித்துள்ளது. மேலும் இவ்வாறு வருகின்ற மக்கள் ஏற்கனவே இராணுவ நடவடிக்கைகள் மூலம் யாழ். மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து சென்றவர்களே. அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். எனவே இதன் பின்னணியில் எதுவித காரணங்களும் இல்லை.

கேள்வி: யாழ். மக்கள் எத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்?

பதில்: கடந்த காலங்களில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாகயாழ். மாவட்டத்தில் பெரும்பாலான கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. இவற்றில் பாடசாலைகளும் அடங்கும். இங்கு கட்டடப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. அத்துடன் கிடைக்கும் கட்டடப் பொருள்களும் கூடிய விலையில் விற்கப்படுகின்றன. இதனால் இதனுடன் தொடர்புடைய தொழில் வாய்ப்புகளும் இல்லாமற் போகின்றன.

ஜி ரி.இஸட் எனும் வெளிநாட்டு நிறுவனத்தின் மூலம் பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் பிற புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்ற போதிலும் அவை மிக மெதுவாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### மீன் பிடிக்க கட்டுப்பாடு

மீன்பிடித் தொழிலிலும் மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். கரைகளில் மட்டுமே மீன் பிடிக்க அனுமதி அளிக்கப்பட்டிருப்பதால் பலர் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளனர்,

யாழ்ப்பாணத்தில் பலர் தமது சொந்த இடங்களுக்குச் செல்லமுடியாமல் இருக்கின்றது. சில இடங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாகக் குறிப்பிடப்பட்டு அங்கு மக்கள் சென்று குடியமர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

தொலைத் தொடர்பு சேவையும் சீரற்ற முறையில் இயங்குவதாலும் — ஒன்று அல்லது இரண்டு 'லைன்கள்' மட்டும் வேலை செய்வதாலும் — மக்களது தொடர்பாடல் நடவடிக்கைகள் சீரற்ற நிலையிலேயே உள்ளன.

மின்சாரமும் சீராக விநியோகிக்கப்படுவதில்லை. அத்தோடு யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதி மக்களுக்கு மட்டுமே மின்சாரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து தெற்குக்குச் செல்வதற்கான போக்குவரத்துப் பிரச்சினைகளும் காணப்படுகின்றன — என்று தெரிவித்தார்.

(உ-5)

# ஒரு வார...

(முதலாம் பக்கத் தொடர்)

அதிகரிக்கிறார்கள் என்று இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

கடந்த சில தினங்களாக வவுனியாவில் இராணுவத்தினரின் நகர்வுகளை அவதானித்துள்ள விடுதலைப் புலிகள் கிழக்கில் தாக்குதல்களை அதிகரித்துள்ளனர்.

அடுத்த சில நாள்களில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் மேலும் அதிகரிக்கலாம் என கொழும்பு ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா வாசிகள் தெரிவிக்கும் தகவல்களின்படி கடந்த வாரம் வவுனியாவில் ஐயாயிரத்துக்கும் அதிகமான துருப்புக்கள் குவிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா — கிளிநொச்சி நெடுஞ்சாலையைக் கைப்பற்ற படையினர் தயாராகி வருகின்றனர் என்ற தகவல் பரவியுள்ளது.

எவ்வாறாயினும் படையினருக்கோ விடுதலைப் புலிகளுக்கோ ஒரே நேரத்தில் வடக்கிலும், கிழக்கிலும் சண்டையில் ஈடுபடுவது கடினமான விடயம் என்பது பல சந்தர்ப்பங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கும் ராஜதந்திர வட்டாரங்கள், இராணுவத்தினரின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகவே விடுதலைப் புலிகள் கிழக்கில் தாக்குதல்களை அதிகரித்துள்ளனர் எனக் குறிப்பிட்டன.

'வடமாகாணத்தில் விரைவில் மேற்கொள்ளப்படக்கூடிய எந்த இராணுவ நடவடிக்கைக்கும் முகம் கொடுக்கும் வகையில் விடுதலைப் புலிகள் வன்னிக் காட்டுப் பகுதியில் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என அங்கிருந்து வரும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

— இவ்வாறு அந்த செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்தது.

(உ-10)

# குஜ்ராலுக்கு டக்ளஸ் வாழ்த்து

இந்தியாவில் புதிதாகப் பதவியேற்றுள்ள பிரதமர் ஐ. கே. குஜ்ராலுக்கு ஈ. பி. டி. பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

''இனக்கலவரத்தின் போது நிகழ்ந்த இன்னல்களை அறிந்தவராகவும், அகதி ஒருவரின் வாழ்க்கைத் துயரங்களை உணர்ந்தவராகவும் விளங்கும் தாங்கள் இந்தியாவில் இவ்வாறான முக்கிய பதவியை வகிப்பது, கடந்த இரு தசாப்தங்களாக இலங்கையில் நிகழ்ந்து வரும் மனித துன்பங்களை முடிவுக்குக்கொண்டு வர உதவும்'' — என்று திரு தேவானந்தா தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# பழுதடைந்த ஆயிரம் கிலோ இறைச்சி மீட்பு

கண்டி மத்திய சந்தைக்கு எடுத்து வரப்பட்ட பாவனைக்கு உதவாத ஆயிரம் கிலோகிராம் நிறையுடைய மாட்டிறைச்சியை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் கைப்பற்றியுள்ளனர்.

லொறி ஒன்றில் இந்த இறைச்சியை எடுத்து வந்த சாரதி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மனித பாவனைக்கு உதவாத மிகக் கூடுதலான அளவு இறைச்சி கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும் என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

(ஐ)

# அரசின்..

(முதலாம் பக்கத் தொடர்)

தில் பங்குபற்றுவதில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ்., புளொட், ரெலோ ஆகிய கட்சிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டன.

அரசின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்ள ஈ. பி. டி. பி. கட்சி சம்மதம் தெரிவித்துள்ளதாக அக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# கடல் வழிப்..

(முதலாம் பக்கத் தோடர்)

டுக்களும், 12பெரிய கப்பல்களும், 9சரக்குக் கப்பல்களும் இன்னும் தேவை.

வோட்டர் ஜெட்கலங்களை இலங்கையில் தயாரிக்கலாம். கனரக ஆயுதங்களையும், ஆயுதம் பொருத்தப்பட்ட கப்பல்களையும் கொள்வனவு செய்ய உக்கிரைன் நாட்டுடன் தற்சமயம் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.

கடற்படையினருக்குத் தேவையானவை எல்லாவற்றையும் வழங்கினால் யுத்தத்தில் வெல்ல முடியும் என நினைக்கிறேன்.

விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதலை முறியடிக்க—பதில் தாக்குதல் நடத்த—திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன அவை இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளன.

2001ஆம் ஆண்டுக்குள் கடற்படையை நவீனமயப்படுத்தக் குறுகிய, நீண்ட காலத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறுகிய காலத்திட்டத்தின் படி கடற்படைக்கு நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்யப்படும் நீண்ட காலத் திட்டத்தின் கீழ் கப்பல்களை நவீன மயப்படுத்துகின்ற இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது விரைவில் ஆரம்பமாகும்.

புலிகளைப் பலவீனப்படுத்துவதன் மூலமே யுத்தத்தில் வெல்ல முடியும், அதன்மூலம் அரசியல் தீர்வைகாணலாம் —என்றார்.

(உ-3-150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29-04-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org